# Fact Sheet

## காசநோய்

**காசநோய் என்றால் என்ன?**
காசநோய், கிருமிகள் மூலம் தொற்றும் நோய். இது நுரையீரலைத் தாக்குவது வழமை. அத்துடன் உடலின் எந்தப் பாகத்தையும் அது தாக்கவல்லது. இது பல நூற்றாண்டுகளாக மக்களைப் பீடித்து வருகிறது.

**காசநோய் எவ்வாறு பரவுகிறது?**
காசநோய் காற்றின் மூலம் ஆளுக்கு ஆள் தொற்றுவது. நுரையீரலில் காசநோய்க் கிருமி பீடித்த ஒருவர் இருமும்பொழுது அல்லது தும்மும்பொழுது காசநோய் பரவுகிறது. இது விரைந்து பரவும் நோய் அல்ல. காசநோய் பீடித்த ஒருவருடன் நெருங்கி, நீடித்து, கிரமமாய் தொடர்புகொண்டால், அது தொற்றக்கூடும்.

**காசநோய்க் கிருமி உள்நுழைவு என்றால் என்ன?**
காசநோய்க் கிருமிகளை மூச்சிழுக்கும் அநேகரால் அவற்றை வளராது தடுக்க முடியும். நோய்வகை தடுக்கும் உடற்பொறிமுறை காசநோய்க் கிருமிகளை பற்றிப்பிடித்து, செயலிழக்கச் செய்யும். இதுவே காசநோய்க் கிருமி உள்நுழைவு எனப்படும். இவர்கள்:

- சுகயீனம் அடைவதில்லை / சுகயீன அறிகுறிகளைப் புலப்படுத்துவதில்லை
- காசநோய்க் கிருமிகளைப் பரப்ப **முடியாதவர்கள்**
- நோய்க்கிருமியின் உள்நுழைவைக்கு ஆட்பட்டதை தோல்-பரிசோதனை புலப்படுத்தும். (குறிப்பு: நீரிழிவு அல்லது தேடிய தடுப்புவலு தேய்வு நுணங்கி (HIV) அல்லது புற்றுநோய் பீடித்தவர்கள் காசநோயக் கிருமியின் உள்நுழைவுக்கு ஆட்பட்டாலும், அவர்களுடைய தோல்-பரிசோதனை அதனைப் புலப்படுத்தாது விடக்கூடும். இத்தகையோர் தமது மருத்துவருடன் கலந்துசாவ வேண்டும்).
- பிற்காலத்தில் காசநோய்க்கு உள்ளாகக்கூடும்

**காசநோய் விபரம் என்ன?**
காசநோய்க் கிருமிகள் வளர்வதை, மனித உடலின் நோய்த்தடுப்பு வலுவினால் தடுத்து நிறுத்த முடியாத வேளையில் அந்த காசநோய்க் கிருமிகள் தொழிற்படவே செய்யும். காசநேயாயின் அறிகுறிகள் பின்வருமாறு:

- இருமல் (3 கிழமைகளுக்கு மேல் நீடித்தல்)
- காய்ச்சல்/ விறைத்தல்/ இரவில் வியர்த்தல்
- களைத்தல்
- காரணம் தெரியாது எடை குன்றுதல்/ பசி குன்றுதல்

உடலின் வேறு பாகங்களில் காசநோய்க் கிருமி பீடிக்கும் அறிகுறிகள் வேறுபடும். அது காசநோய்க் கிருமிகள் வளரும் பாகத்தைப் பொறுத்தது. எடுத்துக்காட்டுகள்: நிணநீர்க்கணு வீக்கம் அல்லது மூட்டு நோ.

**காசநோய்க்கான பரிசோதனைகள் யாவை?**
தோல்-பரிசோதனையின் மூலம் காசநோய் உண்டா என்று சோதிக்கப்படுகிறது. உடன்பாடான தோல்-பரிசோதனை என்பது ஒருவரின் உடலில் காசநோய்க் கிருமி உண்டு என்று பொருள்படும். வைத்திய பரிசோதனை, நெஞ்சுக் கதிர்ப்படம், கக்கல் (நுரையீரலிலிலுந்து இருமிக் கக்கும் சளி) கொண்டு காசநோய்ப் பரிசோதனை செய்யப்படுவதுண்டு.

**காசநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது?**
நோய்க்கிருமியின் உள்நுழைவைக்கு ஆட்பட்டவர்கள் காசநோயைத் தடுக்க மருந்து உட்கொண்டு பயனடையலாம். காசநோயினால் பீடிக்கப்பட்டவர்கள், அதனைக் குணப்படுத்த முழுச் சிகிச்சைக்கு உள்ளாக வேண்டும். பொது சுகாதாரத் துறையிடம் ஒரு மருத்துவர் கேட்டுக்கொண்டால், காசநோய் மருந்துகள் இலவசமாகவே கிடைக்கும். **காசநோயைத் தடுத்து, சிகிச்சையளித்து, குணப்படுத்த முடியும்!**

Tamil May 2008